# இனிமை இல்லம்



குடும்பக் காலாண்டிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமை இல்லம்

இல்லம் - 6 இனிமை - 5
செப்டம்பர் 2010

## இறையியலின் பின்னணியில் இல்லத்திற்கு இனிமை சேர்க்கும் ஒரு குடும்ப காலாண்டிதழ்.


தொகுப்பாசிரியர்:-
தா. பி. சுப்பிரமணியம்

இணைப்பாளர்:-
அருட்தந்தை அன்ரனி லீயோ அடிகள்

வெளியீடு:
திருகோணமலை மறைக்கோட்ட
குடும்ப பணிக்குழு
மேய்ப்புப் பணி இல்லம்
உப்புவெளி
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

## இனிமை இல்லம்

## அன்பு

## நேயர்களுக்கு

## பாலன் பிறப்பினதும்

## மலரும்

## புதிய ஆண்டினதும்

## வாழ்த்துக்களைத்

## தெரிவித்துக்கொள்கிறது.





குடும்ப வாழ்வு பணித்துறைக் குழு
மேய்ப்புப்பணி நிலையம்
உப்புவெளி
திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு நிறை வாசக நெஞ்சங்களே!

"இனிமை இல்லம் சஞ்சிகை 2010 ஆண்டின் இறுதி இதழ் மூலம் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

'குடும்பங்கள் குறிப்பாக கத்தோலிக்க கிறீஸ்தவ குடும்பங்கள் இறை அன்பில் இணைந்து இல்லறத்தைக் கட்டி எழுப்பி ஏனையோருக்கு முன்மாதிரியாகத் திகழவேண்டும்' என்ற எமது திருச்சபையின் விருப்பினைச் செயற்படுத்த துணை செய்யும் முகமாக இச்சஞ்சிகை வெளிவருகிறது.

திருகோணமலை குடும்ப வாழ்வு பணித்துறையினால் திங்கள் தோறும் நோன்மதி (POYA) தினத்தில் உப்புவெளியிலுள்ள மேய்ப்புப்பணிச்சபை நிலையத்தில் திருமண முன்னாயத்தக் கருத்தரங்கு நடைபெறுவதையும் பங்குகளிலுள்ள திருமணமாகாத இளைஞர் யுவதிகள் அக்கருத்தரங்குகளில் பங்கேற்றுப் பயன் அடைவதையும் நீங்கள் அறிவீர்கள்.

அதன் ஒரு நிகழ்வாகவே இந்தச் சஞ்சிகை வெளிவருகிறது.

நீங்கள் படித்துப் பயன் பெறுவதோடு ஏனையோரும் பயன் பெற கொடுத்து உதவுங்கள்.

இறை அன்பில்
அருட்பணி அன்ரனி லீயோ அடிகளார்
இணைப்பாளர்

குடும்ப வாழ்வு பணித்துறை
மேய்ப்புப்பணி நிலையம்
உப்புவெளி
திருகோணமலை
05.12.2010







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லறம் இனிமையாக.........

மரியாள் சூசையைப்போல் நல்லமனத்தோடு நல்லறமாய் இல்லறம் நடத்தினாள். இயேசுவைப் போல் மகனையும் பெற்று நல்லதொரு இனிய குடும்ப வாழ்வை வாழலாம். மனம் போலத்தான் வாழ்வும். மனம் பரிசுத்தமாக இருந்தால் நினைவுகள் தூயதாக இருந்தால் வந்து சேருபவை நல்லதாகவே இருக்கும். வந்து சேருபவை நல்லதாகவே இருக்கும். நடப்பவை நல்லவையாகவும் இருக்கும். அதில் சந்தேகப்பட இடமே இல்லை. ஏனென்றால் மனிதாபிமானத்துக்குச் சக்தி இருக்கிறது நினைவலைகளுக்கு வேண்டியதை இழுத்து வரும் திறன் இருக்கிறது ஆகையால் மனம் தூய்மையாக எண்ணம் தூய்மையின் வண்ணமாக திண்ணமானதாக இருந்தால் நல்லவை வந்து சேரும். நல்லதே நடக்கும். நல்வாழ்வு இனிய இல்லறம் கிடைக்கும்! இது மனோதத்துவ உண்மையும் கூட.

இதனால் தான் இயேசுநாதர் குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள். நீங்கள் அவர்களைப்போல (பரிசுத்தமாக) ஆகாவிட்டால் இறைவனின் இராட்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்றார்."கண்கெட்டதால் உடல் முழுவதும் கெட்டதாயிருக்கிறது. முகக் கண்ணுக்கும் அகக் கண்ணுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. உள்ளத்தின் கதவுகள் தான் கண்கள். கண்பார்வை கெட்டதனால் உள்ளமும் கெட்டு திண்ணமாய் வாழ்வு கெடும்!

கண்பார்வை கெட்டவர்கள் மனதையும் கெடுத்து எப்படி வாழ்வையும் கெடுத்துக் கொள்கிறார்கள் என்று சிறிது பார்ப்போம்.

காதலராய் இருக்கும் போது காதலி தேனீர் கொண்டு வருகிறாள் காதலனுக்கு; நாணத்தோடு தேனீரை நீட்டுகிறாள் அவனுக்கு. அவனும் கூச்ச சுபாவத்தோடு தட்டுத்தடுமாறி வாங்குகிறான். தடுமாற்றத்தில் தேனீர் அவன்மேல் சொஞ்சம் கொட்டிவிட்டது! இருவரும் மிகவும் மனம் நொந்து போயினர்.



"ஐயோ, அனியாயமாக தேனீர் கொட்டிவிட்டதே! உங்கட உடுப்பும் பழுதாகியிருக்குமே! நான் ஒரு மடச்சி பார்த்து கவனமாகக் கொடுக்காம விட்டுற்றன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் என்ர பிழைதான்" என்றாள் மிக்க பரிவன்போடு! "சேச்சே, எல்லாம் என்ற பிழைதான் உங்கள்ள ஒரு பிழையும் இல்ல. நீங்க சரியாகத்தான் தந்தநீங்க. நான் தான் கவனமாக வாங்காமல் விட்டுற்றன். தடுமாற்றத்தோட வாங்கி கீழ ஊத்திப்போட்டன். என்னில் தான் பிழை. உங்கள்ள ஒரு பிழையும் இல்ல! நீங்க கவலைப்படாதேயுங்க!

பார்த்தீர்களா? ஒரு தவறு நடந்தால் அடுத்தவரில் பழிபோட்டு குற்றம் சாட்டி வாக்குவாதப்படாமல், தங்கள் மீதே பழியைப் போட்டு அடுத்தவர் மனதைப் புண்படுத்தாமல் பண்படுத்தி தென்பூட்டுவதில் எவ்வளவு கவனமாக இருக்கிறார்கள்! ஒருவரில் ஒருவர் மிக்கபிரியமாக இருந்தால் இப்படித்தான் ஒருவரில் ஒருவர் குற்றம் சுமத்தமாட்டார்கள் மதித்தொழுகுவார்கள் மரியாதையாகப் பேசிப்பழகுவார்கள்.

மனைவி தேனீர் கொண்டுவருகிறாள் கணவனுக்கு ஆவிபறக்கும் தேனீரை அவன் முன்னே நீட்டுகிறாள். பத்திரிகை படித்துக் கொண்டிருந்த கணவன் கை நீட்டி வாங்குகிறான். ஆரின் கை பிழைபாடோ தேனீர் கொட்டிவிட்டது! பத்திரிகையும் நனைந்து விட்டது!.

"சீ! மூதேவி...சனியன்! தேத்தண்ணியும் நாசமாப் போச்சு என் பத்திரிகையும் பாழாப்போச்சு! ஏன் பாத்துத்தர ஏலாதா, ஆர்ரயோசனையில நிண்டு நீ எனக்குத் தேத்தண்ணி தந்தநீ கழுதை."

"இங்கேபார் தேவையில்லாத கதைபேசி என்னோட காலங்காத்தால கொளுவாத கண்டியோ, நீர்தான் எவளோ ஒருத்தியிரயோசனையில இங்ககிடந்து தேத்தண்ணியவாங்கி ஊத்திப்போட்டீர்!...

"கழுதை! ஓங்கி அடிச்சன் எண்டால் பல் முப்பத்திரெண்டும் பறக்கும்"... இப்படியான சொற்போர்கள் அடிக்கடி நடக்கும் குடும்பங்களில்! காதலராய் இருக்கும் போது ஒருவருக்கொருவர் கசிந்து உருகியவர்கள் கல்யாணமானபின் இப்படி எதிரிகள் போல் கலகம் செய்யக் காரணம் என்ன?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவ உணர்சியால் உந்தப்பட்டு இனக்கவர்ச்சிக்கு காம உணாச்சிக்கு வசமாகி அதீத கற்பனைகளில் மிதந்து சொர்க்கம் காண்போமென்ற எதிர்பார்ப்பில் திருமணத்தில் இணைகிறார்கள். திருமண வாழ்வில்தான் உண்மையை அறிகிறார்கள். உணர்கிறார்கள், எதிர்பார்த்தது இல்லாததால் ஏமாற்றப்பட்டதாக விரக்தியடைகிறார்கள் ஒருவரில் ஒருவர் எரிந்து விழுகிறார்கள்! குடும்பத்தின் பிரச்சனைகளுக்குக் காலாகி விடுகிறார்கள். இவர்கள் குடும்ப பிரச்சனைக்கு வெளியார் யாரும் காரணமில்லை. இவர்களே காரணகாத்தாக்கள்.

பருவ உணர்ச்சியில் காம மயக்கத்தில் ஏற்பட்ட உறவை காதல் என்று பிதற்றியவர்கள் இவர்கள்! அதீத கற்பனையில் மிதந்தவர்கள் இவர்கள். பெருத்த எதிர்பார்ப்பு இவர்களுக்கு இருந்தது. கல்யாணத்தால் ஒன்று சேர்ந்தால் மோட்சமே கிடைத்துவிடும் என்று கற்பனையில் மிதந்து நம்பிக்கையோடு எதிர்பார்திருந்தார்கள்! திருமணத்தில் ஒன்று சேர்கிறார்கள் கற்பனையில் வாழ்க்கையைப் பார்த்தவர்கள். நிஜவுலகுக்கு வருகிறார்கள்.

மானிட வாழ்க்கையில் உண்மையாக என்ன கிடக்கிறது. நடக்கிறது என்று அறிகிறார்கள். உணர்கிறார்கள். தாங்கள் கற்பனை செய்தது போல் எதிர்பார்த்தது போல் ஏதும் இல்லை என்று நினைக்கையில் ஏமாந்து போனதாக விரக்தியுறுகிறார்கள்! இந்த நிலைதான் குடும்பப்பிரச்சினைக்குக் காலாகிவிடுகிறது! முன்பு குறைகளே கண்ணுக்குத் தெரியாது இருந்தவர்களுக்கு குறைகளும் நிறைவாய் தோன்றியவர்களுக்கு, இப்போது ஒருவரில் ஒருவர் குற்றம் சாட்டுகிறார்கள். சிறுதவறும் பெரிதாகத் தோன்றுகிறது. வாதுக்கு நிற்கிறார்கள் மல்லுக்கு நிற்கிறார்கள்!.........எல்லாம் பருவ கிளர்ச்சியில் காமமயக்கத்தில் (கல்யாணத்தில்) ஒன்று சேர்ந்ததின் விளைவு. கஸ்டம் துன்பம் பிரச்சினைகள் வாழ்க்கையில் ஏற்படத்தான் செய்யும். பிரச்சனைகள் கஸ்டங்கள் இல்லாமல் எவர் வாழ்க்கையும் இல்லை. எதையும் எதிர்கொண்டு சமாளிக்கும் மனப்பக்குவம் இருந்தாலே வாழ்க்கையில் வெற்றி பெறலாம். இனிமையுடையதாக வாழலாம்.



எந்தக் கஸ்டத்திலும் தாக்குப் பிடித்து சமாளித்து இன்பம் காணலாம். கணவன் மனைவியிடையே இறுக்கமான அன்புப் பிணைப்பு இருந்தாலே இது சாத்தியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒன்றைத் தெளிவாய் உணரவேண்டும். சகல சீவராசிகளையும் ஆண் பெண்ணாகவே ஆண்டவன் படைத்திருக்கிறான். ஆணும் பெண்ணும் சேர்ந்து கூடிவாழ்வதுதான் அகிலத்தின் இயங்கு சக்தியாக இருக்கிறது. ஆணும் பெண்ணும் அன்பால் ஒற்றுமையால் கட்டுண்டு வாழ்வது தான் அர்த்தமுள்ள மானிட வாழ்வாகும். பெண்ணோடு சேராத மனிதன் பாதி மனிதன்தான். இணையற்ற வாழ்வும் பாதிதான்.

கணவனும் மனைவியும் ஒன்றை நன்றாக உணர வேண்டும். பெண் தாலிகட்டியதில் இருந்து தன் பெற்றோர் சகோதரர் வீடு மரம் செடி கொடி என்று எல்லாவற்றையும் கைவிட்டு துறந்துவிட்டு கைப்பிடித்த நாயகனை நீயே எல்லாமும் என்று நம்பி வருகிறாள். அவள் நம்பிக்கை வீண் போகாது காப்பது கணவனின் பொறுப்புள்ள கடமையாகும். அதேபோல மனைவியும் தாயாக தந்தையாக என்னையும் என்வயிற்றுப் பிள்ளைகளையும் காக்கும் தலைவனாக கடவுள் அனுப்பியிருக்கும் தம் காவலனை, கணவனை மதித்து அவனுக்கு ஒருகுறையும் இல்லாமல் என் கடமையைச் செய்ய வேண்டும் என்று மனையாள் உணர்ந்து நடந்தால் மரியாள் குடும்பம் போல் ஆண்டவரின் ஆசிபெற்ற இனிய இல்லற வாழ்க்கை வாழலாம்.

- சூசை எட்வேட் -

# அனுசரித்துச் செல்வது வாழ்க்கைக்கு முக்கியம்

**Adjustment** என்று சொல்லப்படும் அனுசரித்துச் செல்லும் பண்புகள் இன்று எத்தனை பேரிடம் இருக்கின்றன? தத்தம் குடும்பத்தாருடனும், நண்பர்களுடனும், கூடவே பணிபுரிவோருடனும் பலபிரச்சினைகள் தோன்றுவதற்குக் காரணம் மற்றவரை அனுசரித்துச் செல்லாமையே" வாழ்க்கையில் வெற்றியையும், செய்யும் தொழில் உயர்வின் உச்சத்தையும் பெற்றுவிட்ட பலரையும் கவனித்தோமானால், பொறுமையும் நிதானமும், அனுசரித்துச் சென்றமையும் தான் அவர்களது வாழ்க்கை நெறிகளாக இருந்திருப்பதை உணரலாம்.



அனைவரும் வைத்தியர்களானால் யாருக்கு மருந்து கொடுப்பது? அதனாற்றான் இறைவனும் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்கும் ஒவ்வொரு திறமையையும் பண்பையும் கொடுத்திருக்கிறான். இருப்பினும் வாழ்க்கையில் சோதனைகள் வரத்தான் செய்யும் கடலொன்று இருந்தால் அலை அடிக்கும் வாழ்க்கையென்றால் போராட்டம் இருக்கும் அனைத்தும் எனக்குத்தான் கிடைக்க வேண்டும்: அடுத்தவனுக்குக் கிடைக்கக்கூடாது என்று எப்போது ஒருவன் நினைக்கிறானோ, அப்போதே அவனுக்கு அழிவு ஆரம்பமாகிவிட்டது. என்று எண்ணவேண்டும். சிலரின் தான்தோன்றித்தனமும் அவசரமுமே அவஸ்தைகளில் விழக் காரணங்களாகின்றன.


குடும்பத்தில் அன்பிற் சிறந்தவளாக விளங்கும் ஒருதாயால் ஏன்? பாசமுள்ள ஒரு மாமியாராக விளங்கமுடிவதில்லை? அதிக சகோதர வாஞ்சையுள்ள ஒருவனால் ஏன் பாசமுள்ள ஒரு கணவனாகவும், பண்புள்ள ஒரு மருமகளாகவும் இருக்க முடிவதில்லை.

இதற்கெல்லாம் காரணம் அவரவரின் அசட்டுப்பிடிவாதமும் நானென்ற அகந்தையும், மற்றவரை அனுசரித்துச்செல்லாமையும், தான் ஒருவர் சொல்வதைக்கேட்டு சரியா பிழையா என்று பார்த்து மற்றவர் நடப்பதில்லை. தமக்குச் சரியென்று பட்டதைக் கொண்டு சட்டென்று முடிவெடுப்பதே பின்னர் பல தவறுகள் நடக்கக் காரணமாகின்றன. சுருங்கச் சொன்னால் அவர்களது கர்வம் தான் அவர்களை ஆட்டுவிக்கிறது.

நம்மவர்கள் வெளிநாடு போனால் அந்நாட்டுக்காலச்சார நிலை சூழ்நிலைக்கேற்ப தங்கள் நடையுடை, பாவனைகளையே மாற்றிக் கொள்கிறார்களே? அந்நாட்டின் கலாசாரத்திற்கேற்ப தங்களது தொன்மையான ஒழுக்கப் பண்பாடுகளையே விட்டுக் கொடுக்கிறார்களே? அது போலத்தான் வாழ்க்கையும் சூழ்நிலைக்கேற்ப அனுசரித்துச் செல்ல வேண்டும். அவசரங்களும் அளவுக்கு மீறிய எதிர்பார்ப்புகளும், வீணான கற்பனைகளும், ஒரு போதும் நிரந்தரமான நிம்மதியைத் தராது.

"நதியென்றால் நீரோட்டம் வாழ்க்கையென்றால் போராட்டம் அனுசரித்து அகமிகழ்ந்து வாழ்க்கையை வாழ்ந்தால் வெற்றி நிச்சயம்.

- அக்கரை சாமந்தி -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரின் பங்களிப்பு

தங்கள் பிள்ளைகள் நலமாக வாழவேண்டும் என்று எல்லாப் பெற்றாரும் நினைக்கிறார்கள். ஒரு குடும்பம் சிறந்து விளங்க மேற்படி நினைப்பு மிக மிக அவசியம். அந்த நினைப்பு நடைமுறைக்கு வர வேண்டுமானால் முதலில் பெற்றார் நலமாக இருக்க வேண்டும். இது உடல் நலத்திற்கு மட்டுமே உரியதென்று நாம் நினைக்கக் கூடாது. அவர்கள் மன நலமும் சிறப்பாக இருக்க வேண்டும். இதற்கு முன் உதாரணமாக பெற்றோரின் நடவடிக்கைகள் அமைதல் வேண்டும்.

பெற்றோர் தங்கள் மட்டில் காணப்படும் தேவையற்ற பழக்க வழக்கங்களை படிப்படியாகக் குறைத்துக் கொள்வதுடன் காலப்போக்கில் முற்றாகவே விட்டு விடுதல் அவசியமாகும்.

உதாரணமாக பொய் பேசுதல். மதுபானம் அருந்துதல் - புகை பிடித்தல் போன்றவற்றை பெற்றோர் குறிப்பாக தந்தைமார் விட்டுவிடுதல் வேண்டும்.

தந்தையைத் தேடி வீட்டு வாசலில் காத்திருக்கும் நண்பரிடம் "அப்பா இல்லை வெளியே போய் விட்டார் என்று சொல்"என்று தன் பிள்ளையிடம் சொல்லி அனுப்பும் தந்தை எப்படி தன்பிள்ளை பொய் பேசினால் தண்டிக்க முடியும்.?

பெற்றோர் செய்யும் ஒவ்வொரு செயலும் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு - உயர்ச்சிக்குத் துணையாக இருக்க வேண்டும். முன் உதாரணமாகவும் இருக்க வேண்டும். பெற்றோரின் ஒவ்வொரு சொல்லும் செயலும் தூய்மையானதாக இருந்தால் மிக மிக அவசியமானதாகும்.

நல்ல உணவை - நல்ல உடையை மாத்திரம் பிள்ளைகளுக்கு கொடுப்பதே தங்களின் பிரதான கடமை என்று பல பெற்றார் நினைக்கிறார்கள். இவை அவசியமானவைதான். ஆனால் இவற்றிற்கும் மேலாக பிள்ளைகளது நடத்தைகள் பற்றியும்



அடிக்கடி அவர்களோடு கலந்து உரையாட வேண்டும். அறிவுரைகளைக் கேட்டுத் தன்னை திருத்திக் கொள்ள பிள்ளைகள் முன்வருவார்கள் என்பது என்பது எந்தளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையோ அந்தளவு பெற்றோர் செய்யும் காரியங்களைப் பார்த்தும் தங்களைத் திருத்திக் கொள்வார்கள்.

எனவே, பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாக மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்ப்பீர்களானால் முதலில் உங்கள் நடத்தைகளையும் பிள்ளைகளுக்கு முன்மாதிரியானதாக மாற்றிக் கொள்வது அவசியம்.

- எப்.எஸ் ஆஞ்சலீன் -


# இல்லறத்தில் உறவுச் சிக்கல்கள் வருவது ஏன்?

"குடும்பம் ஒரு கோயில் என்பது தமிழர் கலாச்சாரத்தின் ஆணிவேர்" என்பது நாம் அறிந்த விடயம்.

இந்த நம்பிக்கை இன்று மெல்ல மெல்ல உருமாறி உருக்குலைந்து வருகிறதோ என்ற பயம் இப்போது உருவாகியிருக்கிறது.

தவறான குடும்ப உறவுகளும் அதைத் தொடர்ந்து குடும்ப அமைப்பிற்குள் வரும் பிரச்சனைகள் பற்றிய வழக்குகளே இன்று அதிகமாக பொலீஸில் புகார் செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

நாகரீகத்தின் உச்சக்கட்ட வளர்ச்சியில் இன்று நாம் வசிக்கின்றோம். ஒருவனுக்கு ஒருத்தி என்கிற சமூக ஒழுக்கத்தை மீறுவதற்கான நிறைய வாய்ப்புகளும் வசதிகளும் பெருகிவிட்டடன. அதேவேளை சமூகத்தில் முன்பு இருந்த இறுக்கம் சில விடயங்களில் தளர்ந்திருக்கின்றன. அவற்றை எதிர்மறையாக பயன்படுத்திக் கொள்பவர்கள் எல்லை மீறி குடும்பச் சூழலைச் சிக்கலாகிக் கொள்கிறார்கள்.



பாவம் புண்ணியம் என்பவற்றில் நம்பிக்கை குறைந்து வருவதே இந்த உறவுச் சிக்கலுக்குக் காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய அளவில் பொருளாதார மாற்றங்கள் வருவதற்கு முன்பு தனி நபர் ஒழுக்கம் பெரிய விஷயமாக வலியுறுத்தப்பட்டது. ஆனால் இன்று இறைபக்தி கூட மிகக் குறைந்த நிலையில் சிலவேளை தேவையற்ற ஒரு சங்கதியாக மேலோங்கிக் காணப்படுகிறது.

இந்த நிலை மாற்றப்பட வேண்டும். அல்லது மாற்றம் பெற வேண்டும். இதற்கு குடும்ப உறவுகள் தங்களது கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து கொள்ளவேண்டும். கணவன் மனைவி உறவுக்குள் ஏனையோர் தேவையற்ற நேரத்தில் தலையீடு செய்வது தவிர்க்கப்படல் வேண்டும்.

குடும்பம் - இல்லறம் சீராக நடைபெற அனுபவஸ்தர்களின் ஆலோசனை வழிகாட்டல் என்பன தேவை ஆயினும் அதற்கும் ஒரு எல்லை உண்டு. தம்பதியரின் பெற்றார் மாமன் மாமியர் உற்றார் உறவினர் போன்றோரின் வழிகாட்டல்கள் தம்பதிகளுக்கு குறிப்பாக இளம் தம்பதிகளுக்கு மிக மிக அவசியமானதாகும்.

அதேவேளை அவர்களின் உறவுகளில் சிக்கல் ஏற்படாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

சிக்கல் ஏற்படக் காரணம் என்ன? என்பதைச் சரியாக உணர்ந்து கொண்டாலே ஓரளவ சிக்கல் தீர்ந்துவிடும். அதற்கு ஏற்ப தங்கள் செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்த இருவரும் தயாராக இருக்க வேண்டும் என்பதோடு அதனைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்போம் என்று இருவருமே திட சங்கல்பம் செய்து கொள்ள வேண்டும்.

- ரதி ரூபன் -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதுகலமாக இருக்க வேண்டிய குடும்பங்கள் சில வேளைகுலைந்து போகின்றன காரணம் என்ன?

தம்பதியர்களுக்கிடையே முறையான புரிந்துணர்வு ஏற்படாமையே முக்கிய காரணம்.

ஆமாம்" இருவேறு குடும்பங்களைச் சேர்ந்த ஓர் ஆணும் பெண்ணும் விவாகம் என்ற அமைப்பில் கூட்டுச் சேருகின்றனர்.

இந்த இருவரின் சிந்தனை செயல் என்பன வெவ்வேறாக இருக்கும் என்பதில் வியப்பு எதுவுமில்லை.


இதுவரை தங்கள் தங்கள் குடும்ப வாழ்வு முறைக்கு ஏற்ப வாழந்து கொண்டிருந்த இந்த இருவரும் இப்போது இணைகின்றனர். இந்த இணைப்பு சுவர்களை இறைவன் தன்னிடம் அழைத்துக் கொள்ளும் வரை நீடித்து நிலைக்க வேண்டும் என்பதே நியதி.

நியதி இப்படி இருக்கும் போது குலைவு ஏற்படுகிறது என்றால் என்ன காரணம்..?

பல்வேறு காரணங்கள் இருப்பினும் மிக முக்கிய காரணமாகக் கருதப்படுவது ஒருவர் மற்றவரை ஓரளவேனும் புரிந்து கொள்ளாமையே ஆகும்.

பொதுவாக கணவன். மனைவி. தனது கணவனின் பலம் எது பலவீனம் எது என்பதை அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும் (இங்கே பலம் என்றால் உடற்பலத்தை அல்ல அவர்களது ஆற்றலையே குறிப்பிடுகிறேன். அறிந்து கொண்ட பின் பலத்தை முழுமையாக பயன்படுத்தி வெற்றி கொள்ளுதல் வேண்டும்.

எனவே எமது குடும்பம் தொடர்ந்து குதுகலமாக வாழ்ந்து தங்களுக்கும் ஏனையோருக்கும் பயன்மிக்கதாக அமைய முறையான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வது மிக மிக அவசியமாகும்.



- சு.பிதா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தில் பிரச்சனையா? இருவரும் கலந்தாலோசியுங்கள்

பொதுவாக எங்கள் குடும்பத்தில் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் நாம் என்ன செய்கிறோம்? ஒருவர் மற்றவரோடு கதைப்பதில்லை பின் வாங்கி விடுகிறோம். இதனால் பிரச்சனை தீர்ந்து விடுவதற்கு மாறாக நீடிக்கும் தன்மை உடையதாக வளர்ந்து விடுகிறது.

இன்று பிரச்சினை இல்லாத இடம் எது? அலுவலகம் ஆலயம் அரசாங்கம் தொழிற்சங்கம் விளையாட்டுப்போட்டி.... இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். இதில் குடும்பமும் சேர்ந்து கொள்கிறது.

மனம் திறந்து கலந்துரையாடுவதன் மூலமே பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியும். என்பது அனுபவ அறிஞர்களின் அறிவுரையாகும்.

கலந்துரையாடல் என்றால் ஏற்பட்ட பிரச்சினைக்கு யார் காரணம்? எது காரணம்? என்பதைக் கண்டறிதலாகும்.. சரி. பிரச்சினைக்குரிய காரண கர்த்தாவை கண்டறிந்தபின் அவரைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி குற்றஞ்சாட்டுவதல்ல நோக்கம் - மேற்கொண்டு அவ்வாறான பிரச்சனை மேலோங்காமல் இருப்பதற்கு ஏற்ற வழிவகைகளை கண்டு தொடர்ந்து அதனைச் செயற்படுத்துவதன் மூலமே பிரச்சனை தொடராமல் இருக்கும்.

குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளை இனம் காண்போம் தீர்ப்பதற்கான வழி முறைகளைக் கண்டறிவோம். அதனை நிவர்த்தி செய்து நிம்மதியான குடும்பமாக வாழ முயற்சிப்போம்.

- யூடி அமலன் -







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# MERRY CHRISTMAS

# &

# HAPPY NEW YEAR





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனிமை இல்லம்

நியூ உதயன் திருமலை 026-2220783

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org